# செய்தி வெளியீடு எண்: 727 நாள்: 04.12.2012

**<u>இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை</u>**

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையில் 2012–13 கல்வியாண்டில் பாளையங்கோட்டை மற்றும் சென்னையில் அமைந்துள்ள அரசினர் சித்த மருத்துவக் கல்லூரிகளில் நடைபெறும் ஒருங்கிணைந்த மருந்தாளுநர் (DIP) / நர்சிங் தெரபிஸ்ட் (DNT) பட்டயப் படிப்புகளுக்கான ஒற்றைச் சாளர முறை கலந்தாய்வு சென்னை–106, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின் தேர்வுக் குழு அலுவலகத்தில் கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது. தனியரின் அழைப்புக் கடிதங்கள் துரித அஞ்சல் மூலம் அனைத்து தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி தகவல் / அழைப்புக்கடிதம் கிடைக்கப்பெறாதோர், வலைதளம் "www.tnhealth.org" –ல் தங்களது விண்ணப்ப பதிவு எண் (A.R.No.) குறிப்பிட்டு தங்களுக்குரிய தகவல் / அழைப்புக்கடிதத்தை பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம். அழைப்புக் கடிதம் கிடைக்கப்பெறாத தரவரிசையில் இடம் பெற்ற விண்ணப்பதாரர்கள் தங்கள் அசல் சான்றுகளுடன் அல்லது தற்போது பயிலும் கல்லூரியிலிருந்து பெறப்பட்ட நம்பிக்கைச் சான்றிதழ்களுடன் (Bonafide Certificate) கீழ்க்கண்ட அட்டவணைப்படி கலந்தாய்வில் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கலந்தாய்வில் கலந்துகொள்வோர் அனைவரும் தலா ரூ.3,600/–க்கான இரண்டு கேட்பு வரைவோலைகளை ஏதேனும் ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் **இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை** சென்னையில் மாற்றத்தக்கதாக 03.12.2012 தேதிக்குப் பிறகு எடுத்து வைத்திருக்க வேண்டும். ஒருங்கிணைந்த மருந்தாளுநர் பட்டயப் படிப்பிற்கு கல்விக் கட்டணம் ஆண்டுக்கு ரூ.3,600/–ஆகும். நர்சிங் தெரபி பட்டயப் படிப்பிற்கான கல்விக் கட்டணம் ஆண்டுக்கு ரூ.7,200/–. ஆகும். எனவே ஒருங்கிணைந்த மருந்தாளுநர் படிப்பை தேர்வு செய்வோர் ரூ.3,600/–க்கான ஒரு வரைவோலையையும் நர்சிங் தெரபி பட்டயப் படிப்பை தேர்வு செய்வோர் தலா ரூ.3,600/–க்கான இரண்டு வரைவோலையையும் கல்விக் கட்டணமாக செலுத்த வேண்டும். மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய வலைத் தளம் www.tnhealth.org

**கலந்தாய்வு நடைபெறும் விவரம்:**

| | | |
|---|---|---|
| தேதி | : | 12/12/2012 - புதன்கிழமை |
| அனைத்துப் பிரிவினரும் வருகை புரிய வேண்டிய நேரம் | : | காலை 9.00 மணி |
| சிறப்புப் பிரிவினருக்கான கலந்தாய்வு ( தகவல் தொகுப்பேட்டின் படி) | : | காலை 10.00 மணி |
| அனைத்து ஆண் விண்ணப்பதாரர்களுக்கான பொது கலந்தாய்வு | : | காலை 10.30 மணி |
| அனைத்து பெண் விண்ணப்பதாரர் களுக்கான பொது கலந்தாய்வு | : | பகல் 12.00 மணி |

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**